[Mr. Speaker] [24th April 1962

நியமிக்கப்பெற்றுள்ள அபேட்சகர்கள் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட, அதாவது 14-ஐ விட அதிகமாயிருந்தால் 1962 மே 5-ந் தேதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### (3) ELECTION TO THE COMMITTEE OF PRIVILEGES FOR 1962–63.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That with reference to Rule 183 of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect fifteen members to be members of the Committee of Privileges for the financial year 1962–63."

MR. SPEAKER : The question is—

"That with reference to Rule 183 of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect fifteen members to be members of the Committee of Privileges for the financial year 1962–63."

The motion was put and carried.

MR. SPEAKER : ஒற்றை மாற்று வோட் மூலம் விகிதாசாரப் பிரதிநிதித்துவக் கொள்கைப்படி தேர்தல்களை நடத்துவதற்காக நான் வகுத்துள்ள விதி முறைகளை அனுசரித்து உரிமைகள் பற்றிய குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக அபேட்சகர்கள் 1962 ஏப்ரல் 26-ந் தேதி, வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் தங்கள் நியமனப் பத்திரங்களைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். செயலாளருக்கு மனுச் செய்துகொண்டால் நியமனப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

நியமனப் பத்திரங்கள் 1962 ஏப்ரல் 26-ந் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். வாபஸ் பெற விரும்பும் அபேட்சகர்கள் 1962 மே 4-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்குள் வாபஸ் பெறலாம்.

நியமிக்கப் பெற்றுள்ள அபேட்சகர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட, அதாவது 15-ஐ விட அதிகமாக இருந்தால் 1962 மே 5-ந் தேதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### (4) ELECTION TO THE HOUSE COMMITTEE FOR 1962–63.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That with reference to Rule 221 (1) of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect eleven members to be members of the House Committee for the financial year 1962–63."